# வயதுக்கு வந்த சார்ந்துவாழ்பவர் ஒருவரை உங்களுடைய புகலிட ஆதரவில் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பித்தல்

scottish refugee council

அக்டோபர் 2010

Tamil

நீங்கள் தற்சமயம் உள்துறை அலுவலகத்திலிருந்து (யு.கே. எல்லை முகமை) புகலிட ஆதரவை (முன்னதாக NASS என்பது) பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள் மற்றும் உங்களுடைய கணவர், மனைவி அல்லது துணைவர் உங்களுடன் ஸ்காட்லாந்தில் சேர்ந்துகொண்டாரெனில், நீங்கள் பெறுகின்ற ஆதரவுக்காக அவர்களை வயதுக்குவந்த சார்ந்துவாழ்பவர் ஒருவராக சேர்த்துக்கொள்வது சாத்தியமாகலாம்.

ஆயினும், உங்களுடைய புகலிட ஆதரவில் ஒரு புதிய வயதுக்குவந்த சார்ந்துவாழ்பவரை சேர்த்துக் கொள்ளும்பொருட்டு, உள்துறை அலுவலகம் சில ஆவணங்களை அளிக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறது. இந்த ஆவணங்கள் இல்லாது சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் தேர்ச்சியடைய மாட்டா.

கீழே கோடிடப்பட்டுள்ள தகவல்களை நீங்கள் திரட்டிய பிறகு, ஸ்காட்லாந்து அகதிகள் மன்றத்திலுல் உள்ள எங்களுடைய அலுவலகத்திற்கு திரும்பி வாருங்கள். நாங்கள் உங்களுக்கு சந்திப்புநியமனம் ஒன்றை ஏற்பாடு செய்து தருவோம்.

வயதுக்குவந்த சார்ந்துவாழ்பவர் ஒருவரை நீங்கள் பெறுகின்ற ஆதரவோடு சேர்ப்பது என்பது அவர்கள் உங்களுடைய புகலிடக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று அர்த்தம் **அல்ல** என்பதைக் குறித்துக் கொள்ளவும். நீங்கள் இதை எப்பொழுதும் உங்களுடைய சட்டப்பிரதிநிதியுடன் விவாதிக்குமாறு நாங்கள் ஆலோசனை கூறுகிறோம். ஏனெனில் உங்களுடைய குடும்பச் சூழ்நிலை மாறுதல்களால் உங்களுடைய குடிநுழைவு வழக்கில் தாக்கம் **இருக்கக் கூடும்**.

**ஆவணங்களின் சரிபார்ப்புப் பட்டியல்**

கீழ்க்காணம் சரிபார்ப்புப் பட்டியல் உங்களுடைய விண்ணப்பத்திற்குத் தேவையான ஆவணங்களை நீங்கள் திரட்டுவதற்கு உதவும். நீங்கள் எங்களுடைய அலுவலகத்திற்குத் திரும்பும்போது ஒவ்வொரு பிரிவிலும் கூடுமானவரையில் அனைத்து ஆவணங்களையும் எடுத்து வரவும். இதனால் உங்களுடைய விண்ணப்பம் அங்கீகரிக்கப்படுவதற்கு மேலும் நல்ல வாய்ப்பு உண்டு.

**புகலிடம்**

நீங்களும் உங்களுடைய துணைவரும் ஒரே புகலிடக் கோரிக்கையில் பட்டியலிடப்படுவதற்கான உறுதிபடுத்தும் ஆவணங்கள், அவையாவன:

- உங்களுடைய அல்லது உங்களது துணைவருடைய புகலிடக் கோரிக்கையில் நீங்கள் ஒருவருக்கொருவர் சார்ந்துள்ளதாக உங்களுடைய சட்டப்பிரதிநிதியால் அடையாளம் காட்டப்பட்டு உள்துறை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் புதிய தகவல்களின் பிரதி ஒன்று
- சார்ந்துவாழ்பவர்களை விவரிக்கின்ற மற்றும் உங்களுடைய உறவை உறுதிப்படுத்துகின்ற உயில்வழிக்கொடை வினாப்பட்டியலின் பிரதி ஒன்று
- ஒருவரை ஒருவர் குறிப்பிடுகின்ற, உங்களைடைய அல்லது உங்களுடைய துணைவரின் தகுதிகண்டறிதல்/புகலிட நேர்காணலின் பிரதி ஒன்று,

**உறவுமுறை**

- நீங்கள் திருமணம் ஆனவராக இருந்தால், உங்களுடைய திருமணச் சான்றிதழ் பிரதி ஒன்று

- நீங்கள் திருமணம் ஆகாதவராக இருந்தால், **இதற்கு முந்தைய மூன்று ஆண்டுகளில் இரண்டு ஆண்டு காலம்** நீங்களும் உங்களது துணைவரும் இணைந்து வாழ்ந்து வந்திருப்பதற்கான ஆவண சாட்சியம், அவையாவன:

    - உங்கள் இருவரின் பெயர்களிலும் இருக்கும் பயன்பாட்டு கட்டணப் பட்டிகள்
    - உள்துறை அலுவலகத்திலிருந்து (UKBA) உங்களுக்கு மற்றும் உங்களது துணைவருக்கு முகவரியிடப்பட்டுள்ள கடிதங்கள்
    - உங்களுடைய சட்டப்பிரதிநிதியிடமிருந்து கடிதங்கள்
    - மருத்துவ தொழில்நெறிஞர் ஒருவரிடமிருந்து கடிதங்கள்

- நீங்களும் உங்களது துணைவரும் **கடந்த மூன்று ஆண்டுகளில் இரண்டு ஆண்டு காலம்** தொடர்ந்த உறவோடு இருந்து வந்திருப்பதை உறுதிப்படுத்துகிற உங்களுடைய குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் பிரதி ஒன்று

**வேலைவாய்ப்பு**

உங்களுடைய துணைவர் யு.கே அரசாங்கத்தின் அனுமதி **உடன்** சட்டரீதியாக பணியாற்றிக்கொண்டிருந்தால், நீங்கள் அளிக்க வேண்டியவை:

- காலவரிசைப்படி, மிகச் சமீபத்திய பணியமர்த்துனரில் ஆரம்பித்து, முந்தைய பணியமர்த்துநர்கள் அனைவருடைய எழுத்துமூலப் பட்டியல் ஒன்று,
- பணியமர்த்துநரின் விவரங்களுடன் கடந்த 3 மாதங்களின் சம்பளப்பட்டி அல்லது 12 வார சம்பளப்பட்டியல்
- பணியமர்த்துனரிடமிருந்து பணியிலிருந்து நிறுத்தப்பட்டுவிட்டதற்கான அவர்களுடைய P45 படிவம் அல்லது பிற ஆவணச் சாட்சியம்
- தேசிய காப்பீட்டு எண்
- அவர்கள் பணியாற்றிய தேதிகள்
- அவர்கள் செய்து வந்த வேலையின் வகை

உங்களுடைய துணைவர் யு.க.- அரசாங்கத்திடமிருந்து அனுமதி **இன்றி** பணியாற்றி வந்தாராயின், நீங்கள் அளிக்க வேண்டியவை:

- காலவரிசைப்படி, எழுத்துப்பூர்வமாக முந்தைய பணியமர்த்துநர்கள் அனைவரது பட்டியல்
- அவர்கள் பணியாற்றிய தேதிகள்
- அவர்கள் பணியாற்றிய வேலையின் வகை

உங்களுடைய துணைவர் **ஒருபொழுதும்** பணி செய்திராவிடில், நீங்கள் அளிக்க வேண்டியவை:

- அவர்கள் யு.கே-யில் எவ்வாறு தங்களை பராமரித்துக் கொண்டனர் என்பதற்கான விளக்கம்
- நண்பர்கள் யாராவது அவர்களுக்கு உதவியிருந்தால், அவர்களால் ஏன் மேற்கொண்டு உதவ முடியவில்லை என்பதன் விளக்கத்துடன் அவர்களிடமிருந்து கடிதங்கள், உதவியின் இயல்பு மற்றும் உதவி செய்த காலம்,

**முந்தைய முகவரிகள்**

- யு.கே-வில் உங்களது மிக அண்மைக்கால முகவரியிலிருந்து ஆரம்பித்து உங்களது துணைவர் யு.கே-யில் தங்கியிருந்த முந்தைய முகவரிகள் அனைத்திற்கான காலவரிசைப்படியான எழுத்து மூலப் பட்டியல்,
- ஒவ்வொரு இடமும் யாருக்குச் சொந்தமானது மற்றும் அங்கு வசிப்பதற்காக நீங்கள் ஏதேனும் பணம் செலுத்தினீர்களா என்பதற்கான எழுத்து மூல விளக்கம்.

**வங்கிக் கணக்கு**

- நீங்கள் அல்லது உங்கள் துணைவர் வைத்துள்ள வங்கிக்கணக்குகள் அனைத்திற்குமான முழுமையான, கடந்த 6 மாதங்களுக்கு நாளதுவரையிலான வங்கி இருப்புநிலைத் தகவல், கணக்குகளுக்கு இடையே மாற்றப்படுகிற பணம் போன்ற ஏதாவது பெரிய பரிவர்த்தனைகளுக்கான எழுத்துமூலமான விளக்கம்
- உங்களுடைய கணக்கில் பணம் செலுத்தியவர்கள் எவரிடமிருந்தும் அவர்கள் இந்த பணத்தைக் கட்டியதை உறுதிகூறும் கடிதங்கள்
- நீங்கள் யாருக்காகவாவது பணம் எடுத்திருந்தால், அவர்கள் உங்களிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டதை உறுதிப்படுத்துகிற கடிதங்கள்
- யு.கே.வில் உள்ள உங்களது வங்கியிலிருந்து, முந்தைய கணக்குகள் ஏதாகிலும் முடிக்கப்பட்டிருந்தால் அதை உறுதிப்படுத்தும் கடிதம் ஒன்று

**முக்கியம்:** நீங்கள் அளிக்கிற கடிதங்கள் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும், என்றாலும் உங்களுக்காக கடிதங்கள் அளிக்கிற நபரால் ஆங்கிலத்தில் எழுத முடியாவிட்டால், நீங்கள் அவற்றை எங்களுடனான நியமனசந்திப்பின் போது எடுத்துவருமாறு ஆலோசனை கூறுகிறோம், அப்பொழுது அவர் உங்களுக்காக கடிதம் ஒன்றை எழுத நாங்கள் அவர்களுக்கு உதவ முடியும்.

கடிதத்தில் குறிப்பிட்டுள்ள முகவரிகள் மற்றும் பணியிடங்களின் பட்டியல்களை உங்களால் ஆங்கிலத்தில் எழுத முடியாவிட்டால், அவை உங்களுடைய மொழியிலேயே எழுதலாம்.

நீங்கள் எமது அலுவலகத்திற்கு வரும்போது, மேலே பட்டியலிடப்பட்ட அனைத்து பொருத்தமான சாட்சியங்களையும் அவசியம் கொண்டுவரவேண்டும், இல்லாவிடில் எங்களால் உங்களது விண்ணப்பத்தில் உங்களுக்கு உதவ முடியாமற் போகும்.

Scottish Refugee Council, 5 Cadogan Square, (170 Blythswood Court), Glasgow G2 7PH Tel: 0141 248 9799, Fax: 0141 243 2499,
www.scottishrefugeecouncil.org.uk
Scottish Refugee Council is a charity registered in Scotland.
Registered Charity: SC008639